கனம் திரு. வெ. ராமையா : இதற்குத் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

திரு. ஆர். ரங்கசாமி : எதிர்பாராமல் ஏற்படுகிற தீ விபத்துக்களுக்குத் தான் இந்த உதவித் தொகை கொடுக்கப்படுகிறதா அல்லது கட்சிப் பூசல்களின் காரணமாக ஊரில் ஏற்படும் தீ விபத்துக்களுக்கும் இது கொடுக்கப்படுகிறதா ?

கனம் திரு. வெ. ராமையா : இந்த உதவித் தொகையை பாதிக்கப் பட்டவர்களுக்கு உடனே கொடுத்து விடுகிறோம். கட்சியினுல் ஏற்பட்டதா, அல்லது வேறு காரணங்களினுல் ஏற்பட்டதா என்பதை அப்பொழுது சர்ச்சை செய்வது கிடையாது.

Central Jail (Madras)

* 164 *Q.*—SRIMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Chief Minister be pleased to state whether any steps have been taken to provide flushout latrines at the Central Jail, Madras to prevent the pollution of Buckingham Canal?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

கொடும்பாவி புதைத்தல்

* 165 *Q.*— **திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) முன்னுள் கவர்னர் ஜெனரல் ஒருவரின் உருவம் ஒன்றினை சென்னை கடற்கரையில் புதைத்தது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில், அதனை ஏன் தடுக்க அரசாங்கம் முன் வர வில்லை ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) & (இ) கனம் அங்கத்தினர் குறிப்பிடும் கூட்டத்தைக் கூட்டியவர்கள் கொடும்பாவியை எரிப்பதாக முதலில் உத்தேசித்திருந்தனர். அது நகரப் போலீஸ் சட்டத்தின் 74-வது பிரிவின்கீழ்க் குற்றமாகுமென போலீசார் அவர்களுக்குத் தெரிவித்தார்கள். எனவே, அக்கொடும்பாவியைப் புதைத்து விடுவதென அதே கூட்டத்தில் அவர்கள் முடிவு செய்திருக்கலாம். இது அரசாங்கத்துக்கு முன்கூட்டியே தெரியாது. என்றுலும், இதுபோன்ற அருவருப்பான செயல்கள் மீண்டும் செய்யப்படாதவாறு தடுக்க, அதற்குப் பிறகு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்தகைய செயல்களைத் தடுப்பதில் வெவ்வேறு அரசியல் கட்சிகளும் அரசாங்கத்துடன் ஒத்துழைத்து, குறிப்பாகத் தற்போதைய நெருக்கடிக் காலத்தில் ஆபாசமான இச்செயல்கள் நடக்காமல் பார்த்துக்கொள்ளும் என்று அரசாங்கம் நம்புகிறது.

(*a*) & (*b*) The original proposal of the organisers of the meeting referred to by the Hon'ble Member was to burn the effigy. They were informed by the Police that this was an offence under section 74 of the City Police Act, and so they seem to have decided at the meeting itself to bury the effigy. The Government had no previous knowledge of this. However, suitable action was subsequently taken to ensure that such obnoxious acts did not recur. The Government have no doubt that the various political parties will also co-operate in this matter and ensure that such unseemly acts are avoided, especially during the present emergency.

9th March 1963]

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கூட்டம் நடைபெற்ற இடத்தில் போலீஸ் அதிகாரிகள் இருந்தார்களா ? அப்படி இருந்திருந்தால், முடிவு செய்யப் பட்ட உடனே அவர்கள் ஏன் அதைத் தடுக்க முன்வரவில்லை ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : போலீஸ்காரர்கள் சட்டப்படியும், உத்தரவுப்படியும்தான் நடவடிக்கைகள் எடுக்க முடியும். உத்தரவு இல்லாமல் புதிதாக ஒரு நடவடிக்கையை அவர்கள் எடுக்கமாட்டார்கள்.

திரு. கோ. சி. மணி : அதைப் புதைத்ததற்குப் பிறகாவது உத்தரவு பெற்று, சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சட்டப்படி யார் குற்றம் செய்திருந் தாலும், நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன் : இதற்குமுன் இவ்வாறு அசம்பாவித மான சம்பவங்கள் ஏற்பட்டு, அதற்குத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதே மாதிரி சம்பவம் நடந்தது என்று நான் கூற முடியாது.

Forest resources

* 166 *Q.*—Sri S. MADHAVAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether there is any scheme for undertaking a pre-investment survey of forest resources with a view to assessing the potentialities of forest in relation to further planning and development of integrated forest industries; and

(*b*) if so, the grant obtained therefor?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) & (இ)—ஆம். மத்திய அரசாங்கம் கேட்டுக்கொண்டதன்படி ஒரு திட்டம் தயாரித்து அந்த அரசாங்கத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. அவர்களுடைய ஒப்புதலுக்குப் பின்புதான், அவர்கள் கொடுக்கும் மானியம் எவ்வளவு என்பது தெரியும்.

Tuticorin Port

* 167 *Q.*—Sri K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Works be pleased to state the decisions taken at the meeting which the Secretary of Union Ministry of Transport and Communication had with the State Officials and Hon. Chief Minister in connection with the development of Tuticorin as a Major all-weather port?

The Hon. Sri V. RAMAIAH : A paper [a] is placed on the table of the House.

திரு. கே. ஏ. மதியழகன் : கண்ட்லா துறைமுகத்தை சுங்க வரி இல்லாத துறைமுகமாகச் செய்திருப்பது போல் தூத்துக்குடித் துறை முகத்தையும் செய்வதற்கு நம்முடைய சர்க்கார் யோசனை கூறினார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : கனம் அங்கத்தினர் இந்த அறிக் கையைப் படிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் எழுப்பியுள்ள மூல கேள்விக்கும், இந்த உப கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

---

[a] Printed as Appendix on page 413.